Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 298 Of 2018**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W. 8**

Defence

Court

| | |
|---|---|
| Name | டாக்டர் திருமதி.கலைவாணி |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 24th day of March 2026.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 24th day of March 2026.**

**( சாட்சியை அரசு தரப்பு வழக்கறிஞர் அடையாளம் காட்டினார்)**

5 மற்றும் 6 எதிரிகள் இறந்து விட்ட காரணத்தினால் குற்றம் அற்றுபோய் விட்டது. 2வது எதிரி இளஞ்சிறார். 1,3 மற்றும் 4 எதிரிகள் ஆஜர்.

**முதல்விசாரணை**

நான் தற்போது கடலூர் மாவட்ட அரசு மருத்தவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2017 ஆம் ஆண்டு நான் குறிஞ்சிப்பாடி அரசு மருத்துவமனையில் அரசு மருத்துவராக பணியாற்றி வந்தேன். கடந்த 18.05.2017 அன்று நான் பணியில் இருந்த போது பகல் 1.45 மணிக்கு வடலூர் காவல் ஆய்வாளர் கொடுத்த விண்ணப்பத்தின் பேரில் ரவிச்சந்திரன் வயது 45 என்ற இறந்த நபரின் பிரேதத்தை 2098 தலைமைக்காவலர் திருஞானம் அடையாளம் காட்ட பகல் 2.45 மணிக்கு பிரேத பரிசோதனை செய்ய ஆரம்பித்தேன். பிரேதத்தின் மீது உடல் முழுவதும் விரைப்புதன்மை காணப்பட்டது. மிதமான உடல்வாகு உள்ள பிரேதமாக காணப்பட்டது.

**நான் பிரேத பரிசோதனை செய்த போது வெளிப்புறக்காயங்கள் கீழ்க்கண்டவாறு:**

1. ஆழ்ந்த கிழிந்தக்காயங்கள் அளவு 15X3X செ.மீ அளவு. வலது பின்பக்கவாட்டு தலையில் இருந்து பின் மண்டை வரை இருந்தது. அதோடு பின்மண்டையில் எலும்பு முறிவு ஏற்பட்டு பின்புற மூளை வெளியில் தென்பட்டது.

2. கிழிந்த காயம் அளவு 6X2X1 செ.மீ இடது மேல்பக்கவாட்டு தலையில் தென்பட்டது.

3. இடது மேல்பக்கவாட்டு தலையில் நிறைய கிழிந்த காயங்கள் காணப்பட்டது. அதன் அளவுகள் 5X1X1 செ.மீ.

4. வலது கையில் பின்புறத்தில் 5X1X0.5 செ.மீ கிழிந்தக்காயம் தென்பட்டது.

5. மேல்முதுகில் கிழந்தக்காயம் அதன் அளவு 4X1X1 செ.மீ அளவு தென்பட்டது.

கண் விழி, மூக்கு, வாய் மூடப்பட்ட நிலையில் இருந்தது. அதன் துவாரங்களில் இருந்து எந்தவித கழிவும் இல்லை. நெஞ்சு மற்றும் வயிற்று பகுதி சாதாரணமாக காணப்பட்டது.

**உள்கூராய்வில் காணப்பட்டவை:**

வயிற்றுப்பகுதியில் கொழுப்புகள் தென்பட்டது. நெஞ்சு எலும்பு முறிவு எதும் இல்லை.

இதயத்தில் இதயஉறையில் கொழுப்பும் பார்க்க வெளிர் நிறமாக காணப்பட்டது.

நுரையீரல் வெளிர் நிறமாக கருப்பு கரைகள் உடல் காணப்பட்டது.

தொண்டை எலும்பு சாதாரணமாக இருந்தததது.

வயிற்றில் பகுதி அளவு செறிமானமான உணவு காணப்பட்டது. அதன் அளவு 200 ml ஆகும்.

கல்லீரல், மண்ணீரல் , சிறுநீரகம் வெளிர் நிறமாக தென்பட்டது.

பெருங்குடலில் சிறிதளவு மலம் இருந்தது. சிறுநீரப்பையில் சிறுநீர் முழுமையாக காணப்பட்டது.

மண்டையோட்டில் பின்புற மண்டையில் எலும்புமுறிவு ஏற்பட்டு ஒன்றொடு ஒன்று இணைந்து இருந்தது.

மண்டையோட்டின் சவ்வு கிழிந்த வண்ணம் மேல்பக்கவாட்டில் இருந்து பின் மண்டை வரை இருந்தது.

மூளை கிழிந்தக்காயம் அதன் அளவு 4X1X1 செ.மீ பின் மண்டையில் தென்ப்பட்டது.

பின் மண்டையில் இருந்த இரத்தநாளங்கள் சிதைந்து காணப்பட்டது. தண்டுவடம்

அப்படியே இருந்தது. உடல் உறுப்பு மற்றும் தொண்டை எலும்பு இரத்தங்கள் சேகரிக்கப்பட்டது. பிரேத பரிசோதனையை 3.45 மணியளவில் 18.05.2017 அளவில் முடித்தேன். இறந்த நேரம் பிரேத பரிசோதனை செய்வதற்கு 14 ல் இருந்து 18 க்குள் நேரத்திற்குள் இறந்து இருக்கலாம். மூளையில் ஏற்பட்ட காயங்கள் மற்றும் மேற்பட்ட காயங்களால் இரத்தப்போக்கு ஏற்பட்டு அதனால் இறப்பு நிகழ்ந்துள்ளது என இறுதி அறிக்கை சமர்ப்பிக்கிறேன். **நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அதசாஆ 11 ஆகும்**. தடயவியல் ஆய்வில் உள்ளுறுப்புகளில் மதுபானம் விஷம் எதுவும் இல்லை என அறிக்கை பெறப்பட்டது. அந்த அறிக்கை விவரம் பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:**

கூர்மையான ஆயுதங்களால் தாக்கினால் வெட்டுக்காயங்கள் தான் ஏற்படும் என்றால் சரியல்ல. கிழிந்தகாயங்கள் மழுங்கிய ஆயுதத்தால் தாக்கப்பட்டால் மட்டும் தான் ஏற்படும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court,*
*read over and interpreted to the Witness.*
*Admitted and acknowledged by him/*
*her to be Correct.*

*Sd/-G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*